அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

ஹேவிளம்பி ஆண்டு தை - மாசி பிப்ரவரி 2018 முரசு 11 ஒலி 128



அன்னையே அப்பா திருச்சிற்றம்பலத்து
என்ஐயனே இவ்வுல கதிலே
பொன்னையே உடையார் வறியவர் மடவார்
புகலும் ஆடவர் இவர்களுக்குள்
தன்னையே அறியாப் பிணியால் ஆவி
தளர்கின்றார் தருணம் ஈதெனவே
சொன்னபோ தெல்லாம் பயந்துநான் அடைந்த
சோபத்தை நீ அறியாயோ. - திருஅருட்பா

## ஆன்மீக தியான யாத்திரை அழைப்பிதழ் உள்ளே...

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



ரிஷிகேஷத்தில் கங்கைக் கரை அருகில்

# சன்மார்க்க தியான முகாம் மற்றும் ஆன்மீக யாத்திரை

"நாம் பல ஜனனங்களையும் தப்பி மேலான இந்த மனிதப்பிறவி எடுத்தது கடவுளின் திருவருளைப் பெறுவதற்கே. எவ்வகைப் பிரயாசத்தினாலாவது அந்த அருளை அடைய வேண்டும்." — வள்ளல் பெருமானார்

## இந்த பயிற்சி முகாமில்...



- யோகா, பிராணாயாமம் மற்றும் தியான பயிற்சி
- திருவருட்பா பாராயணம்
- ஞானிகள், முனிவர்கள் தவம் செய்த குகைகளில் தியானம்
- பெரியோர்கள், சாதுக்களின் தரிசனம் மற்றும் அன்னதானம்
- கங்கையில் நீராடல்

போன்ற பல்வேறு அருள் நிகழ்வுகள் உள்ளடங்கிய ஆன்மீக புனித யாத்திரையில் கலந்துகொண்டு குருவருளையும் திருவருளையும் பெற அனைவரையும் அழைக்கின்றோம்.

**உணவு, தங்குமிடம், போக்குவரத்து அனைத்தும் சேர்த்து**

ரயிலில் செல்ல...

**ரூ.15,000/-**



நாட்கள்:

04/03/2018 ஞாயிறு இரவு முதல்

13/03/2018 செவ்வாய் காலை வரை



விமானத்தில் செல்ல

**ரூ.25,000/-**

நாட்கள்:

05/03/2018 திங்கள் மதியம் முதல்

11/03/2018 ஞாயிறு இரவு வரை

செல்லும் இடங்கள்: சென்னை – டெல்லி – ஹரித்துவார் – ரிஷிகேஷ் – வசிஷ்டர் குகை – தேவப்ரயாக் – டெல்லி – சென்னை.



முன்பதிவு அவசியம்:

**+91 99427 76351**

முதியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு அனுமதி இல்லை



# திருச்செவிக்கு விண்ணப்பம்

எல்லாம் உடைய இயற்கை விளக்கக் கடவுளே! தாய் கருப்பையில் சோணிதத் திரளில் சேர்த்து என்னை ஓர் பூதப் பேரணு உருவிற் பெருகி வெளிப்பட இருத்திய காலத்திலும், எனக்குள் உள்ளொளியாகியிருந்து அப்பூதப்பேரணு உருவைச் சிருட்டித்து அருளினீர். அன்றிப் புறத்தில் எவராலும் சிறிதும் சகிக்கப்படாத அதன் அசுத்தம் அருவருப்பு துர்கந்தம் முதலியவற்றைப் பொறுத்து அச்சோணிதத் திரளில் ஓர் ஆவியுருவாகி இருந்து, அத்திரளினுள்ள பல்வகை விரோத தத்துவங்களால் சிறிதுந் தடைபடாமல் என்னுருவைக் காத்தருளினீர்.

அன்றியும், அவ்விடத்து எதிரிட்ட துரிசுகள் எல்லாவற்றையும் நிக்கிரகஞ் செய்தருளினீர். அன்றி, அங்ஙனம் பூத்த ஆன்மசத்திக் கலைகள் வாட்டம் அடையாது வெளிப்பட்டு விளங்க வளர்த்தருளினீர்.

அன்றியும், தாய் கருப்பையினிடத்துப் பூதப்பேரணு உருவில் கிடந்த என்னை அக்கருப்பையில் பவுதிக பிண்ட வடிவில் இருத்தும் வரையில் நச்சுக்கிருமி, நச்சுக்காற்று, நச்சுச்சுவாலை முதலிய உற்பாத வகைகளால் எனது பூதப் பேரணுவுரு சிதறி வேறுபடாமலும் காத்தருளினீர். அன்றியும், தாய் கருப்பையில் பவுதிக பிண்ட வடிவில் என்னையிருத்திய காலத்திலும், எனது இச்சை ஞானக்கிரியைகளை வெளிப்படுத்துதல் முதலிய உபகரிப்பு அதிகரிப்புகளுக்குரிய உபயோக தத்துவ உறுப்புகள் எல்லாவற்றையும் குறைவின்றி வகுத்தமைத்து வளர்த்துக் காத்தருளினீர்.

அன்றியும், அடியேன் தாய் கருப்பையில் பிண்ட வடிவிற்கிடந்த காலத்து, இரும்பிற் பெரிதும் கடினமுடையதாய் இருட்டுக்குகையிற் பெரிதும் இருளுடையதாய் மிகவும் சிற்றளவுடையதாய் அசுத்தம் முதலியவற்றால் நிரம்பிய அக்கருப்பையினுள் நெருக்கத்தாலும் வெப்பத்தாலும் புழுங்கிய புழுக்கத்தினால் வருந்தி வருந்திக் களைத்தபோதெல்லாம் அங்ஙனம் அமுதக்காற்றை அடிக்கடி மெல்லென வீசுவித்து அவ்வருத்தமும் களைப்பும் தவிர்த்துக் காத்தருளினீர்.

திருச்சிற்றம்பலம்



# அவி உணவும் செவி உணவும்



அன்னதான ஆதீனம் தவத்திரு. **கோவை சிவப்பிரகாச சுவாமிகள்** சொற்பொழிவிலிருந்து

நீடுகின்ற மாமறையும் நெடுமாலும் திசைமுகனும் நிமல வாழ்க்கை
நாடுகின்ற முனிவரரும் உருத்திரரும் தேட அருள் நாட்டம் கொண்டு
பாடுகின்ற மெய்யடியார் உளம் விரும்பி ஆனந்த படிவமாகி
ஆடுகின்ற மாமணியை ஆரமுதை நினைந்து நினைந்து அன்பு செய்வாம்.

பெரியோர்களே! எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதியின் தனிப்பெரும் கருணையினாலே நாம் எல்லோரும் இந்த சத்சங்க விழாவிலே கலந்து கொண்டிருக்றோம்.

இந்த விழாவிலே இரண்டு விதமான உணவு வழங்கியிருக்கிறார்கள். ஒன்று அவி உணவு, இன்னொன்று செவி உணவு. இந்த இரண்டு உணவில் அவி உணவு உடல் பசியை ஆற்றும்; செவி உணவு உயிர் பசியை ஆற்றும். உடல் பசி நாம் தினமும் அனுபவிப்பது. ஆனால் உயிருக்கான பசி என்றைக்கு போய் கடவுளை அடைய வேண்டும் என்பதுதான்.

அடுத்து அவி உணவு மலத்தை உண்டாக்கும். எவ்வளவு உண்டோமோ அதில் பாதி வெளியில் வந்துவிடும். ஆனால் செவி உணவு மலத்தை நீக்கும். உயிருக்கு மூன்று மலம் இருக்கிறது. அவை ஆணவம், கன்மம், மாயை. இந்த மூன்று மலத்தை நீக்கக் கூடியதுதான் செவி உணவு.

அடுத்து ஒன்றுக்கு பசி இருக்கிறது. ஒன்றுக்கு பசியே இல்லை. வயிற்றுப் பசிக்கு மூன்று நேரமும் உணவு தேடுகின்றோம். சாப்பாடு கிடைக்கவில்லை என்றால் எங்காவது போய் சாப்பிட்டுவிடுகிறோம் இல்லையா.

ஆனால் நமக்கெல்லாம் ஆன்மப் பசி எடுப்பதேயில்லை. வள்ளல் பெருமானார் சொல்லுகின்ற 'பசித்திரு' என்பது இந்த பசியைதான்.

அவர் உடல் பசியை சொல்லியிருந்தால் தருமசாலையை கட்டிவிட்டு பசித்திருங்களென்று வாசகப் பலகை மட்டும் எழுதியிருக்கலாமே! பிறகு எதற்கு தருமச்சாலை? ஆகையால் நம் பெருமானார் சொல்கின்ற பசித்திரு என்பது ஆன்ம பசி, உயிர் பசி. கடவுளின் அருளை நாம் எப்போது அடைவது? இறைவனின் அருளுக்கு நாம் எப்போது ஆளாவது? என்கின்ற பசி.

ஒரு ஆழ்வார் 'என்று உன்னை நினைக்காத நாளோ அன்றுதான் எனக்கு பசி எடுக்கிறது' என்று பாடுகின்றார். அதனால்தான் அவியுணவு ஆறு சுவை. செவியுணவு ஒன்பது சுவை. அவியுணவு கீழே சென்று தங்குகிறது. செவியுணவு மேலே தலையில் உயர்ந்த இடத்தில் சென்று தங்குகிறது.

அவியுணவாக உள்ளே சென்றது வாந்தியாக வெளியே வந்தால் துர்நாற்றம் வரும். செவியுணவாக உள்ளே சென்றது வாந்தியாக வெளியே வந்ததென்றால் பலர் சாப்பிடலாம். பல பேருக்கு இன்பத்தை கொடுக்கும், பலருடைய நோயை நீக்கும். அதனாலதான் கடவுள் செவியுணவிற்குரிய பொறியாகிய காதை உயர்ந்த இடத்தில் இரண்டாக வைத்து, அவியுணவிற்குரிய பொறியாகிய வாயை சற்று தாழ்ந்த இடத்தில் ஒன்றாக வைத்தார்.

கடவுள் ஒரு வாய் கொடுத்திருக்கும்போதே இந்த உலகத்தை கெடுக்கிறோம். இரண்டு வாய் வைத்திருந்தால்? மகாகவி பாரதியார் சொல்வதைப்போல், 'நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி வஞ்சனை செய்வாரடி கிளியே, அவர் வாய்ச் சொல்லில் வீரரடி' என்பதற்கிணங்கவே அமைந்திருக்கும்.

செவியுணவிற்கு இரண்டு வாய் இருக்கிறது. இந்த இரண்டு வாய்க்கும் கதவே இல்லை. எப்போதுமே திறந்தே இருக்கிறது. ஆனால் அவியுணவு உண்ணும் இந்த ஒரு வாய்க்கு கதவு போடப்பட்டிருக்கிறது. திறந்து விட்டால் உணவு உள்ளே போகும். இப்போது புரிகிறதா செவியுணவு எவ்வளோ பெரிய உணவு என்று. ஆகையால் செவியுணவு அவசியம் வேண்டும்.

இப்போது வள்ளல் பெருமானுடைய நெறியில் 'திரை' என்ற ஒரு சொல் வருகிறது. திரை என்றால் என்ன? இந்த மண்டபத்தில் ஆங்காங்கே தொங்குவதும் திரைதான். அடுத்து கடலில் சுருண்டு சுருண்டு வீசுவதும் திரைதான். ஒரு அரசனுக்கு கப்பம் செலுத்துகிறோமே அதற்கு பெயரும் திரைதான். ஆனால் நம் பெருமானார் சொல்கின்ற திரை எது? அது என்ன செய்கிறது?

ஆன்மாவை தெரிந்துகொள்ள முடியாமல் மறைப்பதே நம் வள்ளல் பெருமானார் சொல்கின்ற திரை. அது நாம் யாரென்று நமக்கே தெரியாமல் மறைக்கிறது.

சரி. இந்த திரை இதுபோலதான் தொங்கிகிக் கொண்டிருக்குமா? வடலூர் சத்திய ஞானசபையில் ஏழு திரைகள் ஏழு நிறத்தில் இருக்கிறதே அதுதான் திரையா என்றால் இல்லை. அது மட்டுமே திரையில்லை.

இங்கிருக்கும் உங்கள் எல்லோருக்கும் உடம்பு இருக்கிறதல்லவா? யாருக்கேனும் உடம்பு இருக்கிறதென்பதை தெரியாமல் இருக்கிறோமா? மனநிலை பாதிக்கப்பட்டிருப்போருக்கு மட்டும்தான் தெரியாது.

சரி. உங்கள் உடம்பில் பெரிய உறுப்பு எது? சிலருக்கு வயிறு பானைபோல் இருக்கும். சிலருக்கு தலை பெரியதாக இருக்கும். சிலருக்கோ கண் பெரியதாக இருக்கும். இந்த கண்ணுக்கு தெரிகின்ற எல்லா உறுப்புகளிலும் பெரிய உறுப்பு எதுவென்றுதான் உங்களிடம் கேட்கிறோம். அது தோல்தான். நம் உடம்பில் இருக்கின்ற உறுப்புகளிலேயே மிகப் பெரியது தோல்தான்.

இந்த தோல் ஒரு திரை. இப்போது நாங்கள் சொல்வது புரிகிறதா? இது

எதை மறைக்கிறது? உள்ளே உள்ள எல்லா உறுப்புக்களையும், அவற்றின் செயல்பாடுகளையும் மறைக்கின்றது. இதற்கு பெயர் தொந்து திரை. இந்த திரைக்குள் கண்ணிற்கு தெரியாமல் எத்தனையோ திரைகள் இருக்கிறது. தோல் நம் கண்களுக்கு தெரிகின்ற திரை. திரை கண்களுக்கு தெரிந்தால் திரைக்கு பின்பக்கம் இருக்கின்ற பொருள் தெரியாது.

அடுத்து நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இந்த ஐந்தும் திரைதான். எப்படியென்றால், யாருக்கெல்லாம் நிலம் தெரிகிறது? எல்லோருக்கும் தெரிகிறதா? ஆகாயம் தெரிகிறதா? காற்றும் தெரிகிறதா? நெருப்பும் தெரிகிறதா? நீரும் தெரிகிறதா? இந்த ஐந்தும் உங்களுக்கு எத்தனை நாட்களுக்கு தெரிகிறதோ அதுவரை அருட்பெருஞ்ஜோதி இறைவன் தெரியமாட்டார். இதைத்தான் நம் திருமூலர், 'பரத்தை மறைத்தது பார் முதல் பூதம்' என்பார். இந்த ஐந்து பூதமான திரைகளும் விலகவேண்டும்.

இதில் நம் வள்ளல் பெருமானார் சொல்லியிருக்கிற ஏழு திரைகள் முறையே கறுப்பு, நீலம், பச்சை, சிவப்பு, பொன்மை, வெண்மை, கலப்பு போன்ற திரைகளாகும். கறுப்பாக எதையாவது நீங்கள் பார்த்தால் கறுப்பு திரையை நினைக்க வேண்டும். சிவப்பாக எதையாவது பார்த்தால் சிவப்பு திரையை நினைக்க வேண்டும். இதுபோல் நாம் திரையை பற்றி அவ்வப்போது நினைக்க வேண்டும். இந்த ஏழு திரைகளில் ஆறு திரைகள் தனித்தனி திரைகள். கறுப்பு என்பது என்னவென்றால் இருள். அந்த இருளை ஒழிப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? விளக்கேற்ற வேண்டும். விளக்கை எப்படி ஏற்றுவது? அதாவது நீங்கள் தவறு செய்யாமல் வாழ்ந்துவிட்டால் விளக்கு ஏற்றியதாக அர்த்தம். சிலர் தெரிந்தே தவறு செய்வார்கள். சிலர் தெரியாமல் தவறு செய்வார்கள். உண்மையாக நடந்த சம்பவம் ஒன்றை காண்போம்.

ஒரு ஊரில் பையன் ஒருவன் லாட்ரி டிக்கெட் விற்றான், வயதானவர் ஒருவர் அவனிடம் வந்து தம்பி ஆறு சீட்டு கொடு என்றார். அவன் ஆறு சீட்டையும் ஒரு கவரில் வைத்து கொடுத்தான். கவரை கையில் வாங்கியவர் பணத்தை எண்ணிப் பார்த்தார். நாற்பது ரூபாய்தான் இருந்தது. இன்னும் இருபது ரூபாய் வேண்டும். 'தம்பி என்னிடம் நாற்பது ரூபாய் தான் இருக்கிறது இன்னும் இருபது ரூபாய் இல்லை' என்று சொன்னார். அதற்கு அந்த பையன், 'அதற்கென்ன தாத்தா நீ சீட்டை கொண்டு போ பணத்தை நாளைக்கு கொண்டு வந்து கொடு' என்றான்.

'வேண்டாம் நீ இந்த கவரோட இப்படியே வைத்திரு. நாளைக்கு நான் இருபது ரூபாய் கொடுத்துவிட்டு இந்த கவரை வாங்கிக் கொள்கிறேன்' என்றார். அதற்கு அந்த பையன் 'தாத்தா இந்த ஆறு சீட்டில் இருக்கிற நம்பர் இந்தந்த மாநிலம் சீட்டுன்னு உனக்கு எழுதி தரட்டுமா' என்று கேட்டான்.

அதற்கு அந்த பெரியவர், 'நீ எழுதி தர வேண்டாம், நான் வந்து பணத்தை கொடுத்துட்டு வாங்கிக்கிறேன்' என்று கூறிவிட்டு சென்றார். அந்த ஆறு

*சீட்டில் ஒரு சீட்டிற்கு அன்று இரவு ஒருகோடி ரூபாய் பரிசு விழுந்தது. இந்த பையன் நினைத்தால் எந்த சீட்டிற்கு பரிசு விழுந்ததோ அதை எடுத்துவிட்டு மற்றொரு சீட்டை வைத்திருக்கலாம். அவர் எழுதி வாங்கிக் கொண்டும் செல்லவில்லை. அப்படியிருந்தால் ஏமாற்றவும் முடியாது. மீதி இருபது ரூபாய் பணமும் கொடுக்காமல் போயிருக்கிறார். இதை காரணமாக வைத்து 'தாத்தா நீ நாலு சீட்டுக்குத்தான் பணம் கொடுத்த மீதி இருந்த இரண்டு சீட்ல ஒற்றுக்குத்தான் பரிசு விழுந்திருக்கு' என்றும் அவன் சொல்லாம். இல்லையென்றால் பரிசு விழுந்திருக்கிறதென்றே சொல்லாமல் விட்டிருக்கலாம்.*

*அந்த பையனுக்கு தவறு செய்வதற்கான வாய்ப்பு நிறையவே இருக்கிறது. மறுநாள் அந்த பெரியவர் வந்து, 'தம்பி இந்தா இருபது ரூபா' என்று பணத்தை எடுத்து கொடுத்தார். அவன் அதை வாங்கிக்கொண்டு அந்த கவரை எடுத்துக் கொடுத்து, 'தாத்தா பத்தரமா கொண்டு போ, நீ நேத்து வாங்கின சீட்டுல ஒற்றுக்கு ஒருகோடி ரூபா பரிசு விழுந்திருக்கு' என்றான். இவன்தான் மனிதன். அந்த பையன் பெயர் சேகர். இது நடந்தது கேரளாவில். இவனைப் போன்று இருப்பவர்கள்தான் திரையை விளக்குவதற்கு முயற்சி செய்கின்றார்கள் என்று அர்த்தம். திரை என்கிற இருள் தானே விலகுமா? இப்படி இருந்தால்தானே இருள் விலகும்.*

*நமக்கு தவறு செய்வதற்கு எவ்வளவு பெரிய வாய்ப்பு கிடைத்தாலும் செய்யாமல் இருந்தோம் விழிப்போடு இருந்தோமென்றால் அகத்தில் விளக்கேற்றுகிறோம் என்று அர்த்தம். இன்னும் வேறு எந்த விதத்தில் விளக்கேற்றுவது?*

*ஒரு ஹோட்டல் முதலாளி ஒரு விரதம் வைத்திருந்தார். அதாவது ஒவ்வொரு நாளும் முதலில் வரும் வருமானத்தை வடலூர் தருமச்சாலைக்காக உண்டியலில் போட்டுவிடுவார். அதை மூன்று அல்லது நான்கு மாதத்திற்கு ஒருமுறை வடலூர் தருமசாலையில் அன்னதானம் செய்துவிடுவார்.*

*ஒருநாள் காலை ஆறு மணிக்கு ஒரு பஸ் வந்து நின்றது. பஸ்ஸிலிருந்து ஐம்பது பேர் இறங்கினார்கள். உள்ளே போய் சாப்பிட்டார்கள். பில் எழுதுபவன் ஒவ்வொரு டேபிளாகச் சென்று அவரவர்களுக்கான பில்லை எழுத முற்பட்டான். ஆனால் அவர்களோ எங்கள் எல்லோருக்கும் ஒரே பில்லாக போட்டு அவரிடம் கொடுத்து விடுங்க என்று ஒருவரை கை காண்பித்தார்கள்.*

*ஐம்பது நபர்களும் ஆளுக்கு 100 ரூபாய் என உணவு அருந்தியுள்ளனர். ஆக மொத்தம் 5000 ரூபாய் வந்தது. உடனே பில் எழுதுபவன் முதலாளியிடம் வந்து, 'ஐயா ஐம்பது பேரும் ஆளுக்கு 100 ரூபாய்க்கு சாப்பிட்டிருக்காங்க. எல்லாம் சேர்த்து 5000 ரூபாய் பில் ஆகுது. ஒரு நூறு ரூபாய்க்கு முதல் பில்லா போட்டு உண்டியல்ல போட்டுடலாம், மீதி 49 பேரோட பில்ல ரெண்டாவதா போட்டு நாம வச்சிக்கலாம்' என்று யோசனை சொன்னான். அப்போது அந்த முதலாளி, 'டேய் நீ கடவுளையே ஏமாத்தலாம்னு பாக்குறியா? கடவுள ஏமாத்த முடியுமாடா? அவரு நம்மல ஏமாத்திடுவாருடா.*

அதனால இறைவன நாம ஏமாத்தலாமாடா? அவன ஏமாத்தவே முடியாது. அதனால போடுரா ஒரே பில்லா' என்றார். அந்தப் பணத்தை வாங்கி உண்டியலில் போட முற்பட்டார். அந்த உண்டியல் ஓட்டை சிறிதாக இருந்ததால் அதன் பூட்டை திறந்து போட்டுவிட்டு பெருமானை நினைத்து மிகவும் சந்தோஷப்பட்டார். 'ஆஹா! பெருமானே நான் என்ன தவம் செஞ்சேனோ? இவ்வளோ காசு என் பெருமானுக்கு போய் சேந்திருக்கே' என்று சந்தோஷப்பட்டார்.

அன்றைக்கு மாலையே ஐந்து பஸ் வந்து நிற்கிறது. ஒரு பஸ்ஸிற்குரிய பணத்தைத்தானே அந்த முதலாளி காலையில் தானம் செய்தார். அதற்கு பரிசாக ஐந்து பஸ் பணத்தை மாலையிலேயே பெருமானார் கொடுத்தார். இவர்களைப் போன்ற அன்பர்கள்தான் நாட்டில் இன்றைக்கு அரிச்சந்தரன். என்றோ வாழ்ந்த அரிச்சந்தரன் கதையை படித்து என்ன லாபம். இன்று வாழ்கின்ற அரிச்சந்திரன் இவர். இவர் திருப்பனந்தாள் என்ற ஊரில் துர்காபவன் எனும் ஹோட்டல் நடத்தி வரும் முதலாளி. இன்றைக்கும் அது நடைமுறையில் இருக்கிறது.

பொருளாசை வந்ததென்றால் மிகப்பெரிய ஞானியாக இருந்தாலும் ஏமாற்றிவிடும். அவ்வளவு பெரிய மோசமான ஆசை பொருளாசை. இந்த பொருளாசையால் திரை இன்னும் தடிக்கும்.

திருச்சிற்றம்பலம்

# தெரிந்து தெளிவோம்

**கொன்றிலாரைக் கொலச் சொலிக் கூறினார்**
**தின்றிலாரைத் தினச் சொலித் தெண்டித்தார்**
**பன்றியாய் படியில் பிறந்து ஏழ்நரகு**
**ஒன்றுவார் அரன் ஆணைஇது உண்மையே**

**கொ**லை செய்யும் உணர்வோ, குறிக்கோளோ இல்லாதவர்களைக் கொலை செய்யத் தூண்டியவர்களும், ஊன் உண்ண விரும்பாதவர்களை உண்ணும்படி கட்டாயப்படுத்துபவர்களும் பூமியில் பன்றியாய் பிறந்து துன்பப்படுவார்கள். துன்பம் இதோடு முடிந்ததா என்றால் இல்லை. உயிர் வாழும்போது பன்றியாய் படும் துன்பத்தோடு இறந்த பிறகு எழுவகை நரகத் துன்பங்களையும் அனுபவித்து தவிப்பர். இது இறைவன் மீது ஆணை. இது சத்தியம்.

கொலை செய்வதிலும் கொடிய குற்றம் கொலை செய்யத் தூண்டுவது. அதுபோல ஊன் விரும்பாதவரை உண்ணக் கட்டாயப்படுத்துவது. இதற்கெல்லாம் தண்டனை நிச்சயம் உண்டு.

# தெய்வத் தீந்தமிழ் திருஅருட்பா

**அன்பு உள்ளங்களே!**

நாம் இறைவனை சார்ந்து வாழ்ந்தால், நமது வாழ்வு சரணாகதி அடைந்த வாழ்வாகும். சரணாகதி வாழ்வையே வழிபாடு வலியுறுத்துகிறது. பரம்பொருளை வழிபடுவது என்பது பரம்பொருளின் விருப்பப்படி வாழ்வது. இதற்கான வழிவகைகளையே நம் பெருமானார் திருஅருட்பாவில் இயம்பியுள்ளார்கள். திருஅருட்பாவை பக்தியோடு பாராயணம் செய்வதும் பரம்பொருளிடம் சரணாகதி அடைவதும் ஒன்றே. எனவே அனுதினமும் திருஅருட்பாவை பாராயணம் செய்து உய்வோமாக!

*என்னுயிர்க்கு உயிராம் தெய்வமே என்னை*
*எழுமையும் காத்தருள் இறைவா*
*என்னுளத்து இனிக்கும் தீஞ்சுவைக் கனியே*
*எனக்கு அறிவு உணர்த்திய குருவே*
*என்னுடை அன்பே திருச்சிற்றம் பலத்தே*
*எனக்கருள் புரிந்தமெய் இன்பே*
*என்னை ஈன்றெடுத்த தந்தையே அடியேன்*
*இசைக்கின்றேன் கேட்க இம்மொழியே.* 1

*கருணையார் அமுதே என்னுயிர்க்கு உயிரே*
*கனிந்த சிற்றம்பலக் கனியே*
*வருண மாமறையின் மெய்ப்பொருள் ஆகி*
*வயங்கிய வள்ளலே அன்பர்*
*தெருள்நிறை உளத்தே திகழ்தனித் தலைமைத்*
*தெய்வமே திருவருட் சிவமே*
*தருணம்என் ஒருமைத் தந்தையே தாயே*
*தரித்தருள் திருச்செவிக்கு இதுவே.* 2

*என்னை ஆண்டருளி என்பிழை பொறுத்த*
*இறைவனே திருச்சிற்றம் பலத்தே*
*என்னை ஆண்டு அஞ்சேல் உனக்குநல்*
*அருளிங்கு ஈகுதும் என்ற என்குருவே*
*என்னை வேறெண்ணாது உள்ளதே உணர்த்தி*
*எனக்குளே விளங்கு பேரொளியே*
*என்னை ஈன்றளித்த தந்தையே விரைந்திங்கு*
*ஏற்றருள் திருச்செவிக்கு இதுவே.* 3

# சிந்தை மகிழ...
# அவனருளாலே அவன் தாள் வணங்கு

**அ**நுபூதி என்றால் ஒன்றை அனுபவித்து அதன் மூலம் பெறப்படும் அனுபவம் என்று அர்த்தம். அநுபூதி நாம் பெறும் அனுபவத்தைச் சார்ந்துள்ளது. அதாவது, நாம் பெற்ற அனுபவம் சுகமாக இருந்தால் சுகாநுபூதி என்றும், துன்பமாக இருந்தால் துக்காநுபூதி என்றும் கூறலாம். இதுபோன்ற சுகதுக்கங்களுக்கு அப்பாற்பட்ட அனுபவத்தை நாம் பெறும்பொழுது அதனையே ஆனந்த அநுபூதி என்கிறோம். இந்த ஆனந்த அநுபூதியில் மூழ்கி அதனை அனுபவிக்கும்பொழுது "இது இப்படி இருக்கும்" என்று விவரிக்க இயலாது. மேலும் அந்த அனுபவம் பெற்றவரையும் அங்கு காண இயலாது. ஏனெனில் 'நான்' என்ற அகங்காரம் ஒழிந்த பின்புதான் இது சாத்தியப்படும். இதுவே அவரை சொல்லொணா பரவசநிலையை அடையவைக்கும்!

இந்த அநுபூதியை 3 விதமாக கூறலாம். **1.ஸ்வாநுபூதி 2.ஸாநுபூதி 3.ஸஹ அநுபூதி**

தனியொருவன், புலன்கள் மூலமாக வெளியே இருப்பவற்றை கண்டு, கேட்டு, பார்த்து, ருசித்து, உணரும் நிலை **ஸ்வாநுபூதி** (ஜட இயற்கையை அனுபவித்தல்). தன்னிலையை புரிந்து கொண்ட பின்பு மற்றவர்களின் நிலையை புரிந்து கொள்ளும் நிலை **ஸாநுபூதி** (மற்ற உயிர்நிலைகளை புரிந்து கொள்ளுதல்). மற்றவர்களின் சுகதுக்கங்களை புரிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் பகிர்ந்து கொள்வதால் **ஸஹ அநுபூதி** அடையலாம். இஃது பிறருக்காக வாழும் நிலை,(அன்பாக இருத்தல்).

முதல் அநுபூதியை விட இரண்டாவது சிறந்தது. இரண்டாவதைவிட மூன்றாவது சிறந்தது. இவையனைத்தும் மனித தத்துவத்துக்கு உதாரணம். இன்னும் இதை விரிவாகக் காணலாம்.

முதலாவது ஸ்வாநுபூதி. இது தனி நபர் சம்பந்தப்பட்டது. எனவே தனி ஒருவனுக்கு மட்டுமே பொருந்தும். தன்னுடைய புலன்கள் மூலமாக இயற்கையில் இருக்கின்றவற்றை கண்டு, கேட்டு, ரசித்து அனுபவிக்க ஆரம்பிக்கும் நிலை!

புதிதாக பிறக்கும் குழந்தைக்கு எந்த ஒரு அனுபவமும் கிடையாது. அதற்கு எதை பற்றிய விழிப்புணர்வும் இல்லை. சில தினங்களுக்கு பிறகே தன்னைச் சுற்றி நடப்பவற்றை கவனிக்கும்.

தன்னுடைய தாய் தன்னை தொடுவதை உணர்ந்து கொள்ளும். தாய் சிரிப்பதை பார்த்து தானும் சிரிக்க முயலும். இது இயற்கையின் தன்மை. பிறப்பின் அர்த்தமும்கூட. எனவே, ஒருவன் தன்னை சுற்றி நடப்பவற்றை கண்டு, கேட்டு, மகிழ்ந்து தன்னை கணிக்க ஆரம்பிக்கின்றான்.

இந்த இடத்தில்தான் விலங்கிலிருந்து மனிதன் வேறுபடுகிறான். விலங்கு ஐம்புலன்களை வைத்து இயற்கையை உணரும் ஆனால் அதற்கு ரசிக்கவோ, அனுபவிக்கவோ தெரியாது! ஆனால் மனிதனுக்கு ஆறாவது புலன் பரந்தநிலையில் வெளிப்புறத்தை நோக்கி விரிந்திருப்பதால் அவன் பலவற்றை பார்த்து, அனுபவித்து தன்னிலையைப் பெறுகிறான். இதுவே ஸ்வாநுபூதி.

இதுவும் நபருக்கு நபர் மாறுபடும். ஏனெனில் ஒவ்வொருவரும், ஒரே விஷயத்தை வேறு வேறாக பார்க்கலாம். ஆகையினால் அனுபவத்திலும் வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது.

உ.தா: ஆசிரியர் அனைத்து மாணாக்கர்களுக்கும் ஒரே மாதிரியாகத்தான் பாடங்களை கற்றுக்கொடுக்கிறார். ஆனாலும் ஒரு சிலருக்கு முழுவதும் புரிந்திருக்கும். ஒரு சிலருக்கு ஓரளவு புரிந்திருக்கும். மேலும் சிலர் வகுப்பில் கவனம் செலுத்தாததால் புரியாமலேயேகூட போயிருக்கும். இப்படித்தான் அனுபவக் கூறுகள் மாறுபடுகின்றன.

மனிதர்களாக பிறந்திடினும், அறிவு வளராத குழந்தைகளாகவே பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மனித உருவத்தில் இருக்கின்ற விலங்காகவும், இயற்கையை அனுபவிக்காமலும், அனுபவிக்கத் தெரியாமலும் வாழ்ந்து வருகின்றனர்.

அடுத்ததாக ஸாநுபூதி, தன்னிலையை புரிந்து கொண்டபின் மற்றவர்களின் நிலையை புரிந்து கொள்ளும் நிலை. அதாவது ஸ்வாநுபூதியின் துணை கொண்டு ஸாநுபூதியை அடைதல்!

உ.தா: நேர்முகத் தேர்விற்காக ஒரு அலுவலகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார் இளைஞர் ஒருவர். நேர்முகத் தேர்வு என்பதால் தூய வெண்ணிற ஆடை அணிந்திருந்தார். மழை பெய்திருந்த காரணத்தால் சாலையில் சேறும் சகதியும் ஆங்காங்கே தேங்கிக்கிடந்தது. எனவே அவர் மிகவும் கவனமாக நடந்துகொண்டிருந்தார். அப்பொழுது ஒரு கார் அவரருகே வேகமாக சென்றதில் அவருடைய உடை முழுவதிலும் சேற்றுத் தண்ணீர் வாரியடிக்கப்பட்டது. அந்த நிலையில் நேர்முகத் தேர்விற்கு செல்ல இயலாததால் வேலை வாய்ப்பை இழந்தார். காலங்கள் கடந்தன. அவருடைய சொந்த முயற்சியால் நன்கு

*உயர்ந்த நிலையில் இருந்தார். சொந்தமாக கார் வாங்கி அதில் பயணம் செய்யலானார். மழை பொழியும் போதெல்லாம் தன்னுடைய ஓட்டுனரிடம் மெதுவாக செல்லும்படி எச்சரித்துக் கொண்டே இருப்பார். தனக்கு அன்று நேர்ந்த நிலை எவருக்கும் வரவேண்டாம் என்று மற்றவர்கள் மீது கொண்டுள்ள அக்கறை அவருக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. இது தன்னிலையிலிருந்து மற்றவர்களை பார்த்தல். ஆனால், இது அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொருந்துமா என்று பார்த்தால் அது சற்று சந்தேகம்தான்.*

*தன்னிலையிலிருந்து மற்றவர்களை பார்க்கும்பொழுது அவர்களின் நிலையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் நிலையிலிருந்து பார்த்தால் மட்டும்தான் அவர்களை முழுவதும் புரிந்து கொள்ள முடியும்.*

*உ.தா: இரயில் வண்டியில் ஒரு இளைஞனும், பாட்டியும் பயணித்துக் கொண்டிருந்தனர். அந்த இளைஞர் தான் காணும் அனைத்தையும் மிகவும் வியப்புடன் பார்த்துக் கொண்டே இருந்தார். பயணிகளைக் கூட.*

*5 வயது சிறுவனைப் போல நிறைய கேள்விகளை பாட்டியிடம் கேட்டுக் கொண்டேயிருந்தார். அந்த பாட்டியும் சற்றும் சலிக்காமல் அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பொறுமையாக பதிலளித்துக் கொண்டே இருந்தார். இதைக் கண்ட மற்ற பயணிகளுக்கு வேடிக்கையாக இருந்தது. சிலருக்கு வெறுப்பாகக்கூட இருந்தது. பாட்டி கொடுக்கும் செல்லம்தான் அவனை இப்படி புத்திசுவாதீனம் இல்லாதவனைப்போல் ஆக்கிவிட்டது என்று அவருக்கு எதிரே அமர்ந்திருந்த பெண்மணி நினைத்துக் கொண்டார். சிறிது நேரம் கழித்து அவர் அந்த பெண்மணியை கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தார். பெண்களையே காணாத ஒருவன் காண்பதுபோல இருந்தது அது! இதை பொறுத்துக் கொள்ள முடியாமல் அந்த பெண்மணி பாட்டியுடன் கோபம் கொண்டு சண்டையிட ஆரம்பித்தார். "அந்த பையனுக்கு என்ன பைத்தியமா" என்று கேட்டாள். அதை கேட்ட பாட்டி சற்று நேரம் அமைதியாக இருந்துவிட்டு பின்னர் பேச ஆரம்பித்தார்.*

*"பிறவியிலேயே இந்த பையன் பார்வையற்றவன். அவன் பிறந்த சில தினங்களிலேயே அவனுடைய தந்தை இறந்துவிட்டார். அவனுடைய தாயும் சில தினங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். அந்த தாயின் கண்களைத்தான் மருத்துவர்கள் இவனுக்கு வைத்திருக்கிறார்கள். இப்பொழுதுதான் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு சென்று கொண்டிருக்கிறோம். இந்த உலகத்தின்*

பிரம்ம ஸ்வரூபத்தை இப்பொழுதுதான் பார்க்கிறான்" என்று கூறி முடித்தாள் பாட்டி. இதைக் கேட்ட அந்த பெண்ணிற்கு இருதயமே உடைந்ததுபோல ஆனது. கண்களில் நீர் பெருகியது.

எனவே நாம் காணும் அனைத்து விஷயங்களும் உண்மை கிடையாது. அதில் நமக்கு தெரியாத பல விஷயங்கள் இருக்க வாய்ப்பு உள்ளது. எனவே தன்னிலையிலிருந்து மற்றவர்களை காணும் பொழுது தன்னுடைய அனுபவத்தை மட்டும் வைத்து கணிக்காமல் அவர்களின் நிலையையும் உணர்ந்து செயல்படுதல் ஸாநுபூதி.

மூன்றாவது ஸஹ அநுபூதி. எல்லாவற்றிலும் இருக்கின்ற உண்மையை உணர்ந்து, அனுபவித்து, ஜடத்தை விலக்கி மூலத்தை பார்க்கும் நிலை.

அதாவது இறைவன், உயிர், இயற்கை என்ற மூன்று மட்டும்தான் உள்ளது. இதைத்தான் பதி, பசு, பாசம் என்கிறது சைவ சித்தாந்தம். இம்மூன்றும் அநாதி. உயிருக்கும் இறைவனுக்கும் இடையில் பாசம் எனப்படும் அறியாமை மறைத்துக்கொண்டு ஜீவன் தன் உண்மையையும், இறையுண்மையையும் உணர முடியாமல் தடுக்கின்றது.

இந்த சிறைக்கூட்டிலிருந்து வெளிவருவதற்கு பரமாத்மாவின் அனுக்கிரகம் அனைவருக்கும் வேண்டும். ஆனால் அதனை அடைவதற்கு தனித்தனியாக ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். தனக்காக என்று வாழ்வதில் தவறேதுமில்லை. ஆனால் நாம் மற்ற உயிர்களின் சுகதுக்கங்களை பற்றி சிந்திப்பதால் மட்டுமே ஆத்மாவின் இயல்பு நிலையாகிய தயவு வெளிப்படும். அப்போதுதான் நாம் நம்முடைய செயற்கை குணங்களை மறந்து செயல்படுவோம். ஆத்மாவாகிய நாம் தன் இயல்பு நிலையாகிய தயவோடு இருக்கும்போது மட்டுமே ஆனந்த அனுபவத்தின் பக்கம் செல்ல முடியும். பின் ஒவ்வொரு படியாய் அடியெடுத்து வைத்து தெய்வத் தன்மையை அடைய முடியும்.

இத்தகைய அறிவும் சுதந்தரமும் இருந்தும் இதை பயன்படுத்தாமல் இருப்பவன் விலங்குபோல் அநுபூதி இல்லாமல் இருப்பான். திருவருளால் தனக்குக் கிடைத்த இந்த அறிவையும் சுதந்திரத்தையும் பயன்படுத்தி தானும் வாழ்ந்து மற்ற உயிர்களையும் வாழ வைப்பவன் 'மனிதன்' என்ற நிலையை அநுபூதியுடன் எட்டுகிறான். தான் உயர்ந்ததோடு மட்டுமல்லாமல் மற்றவர்களையும் உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்ல முற்படுபவன் ஆனந்த அநுபூதியுடன் 'முழுமனிதன்' என்ற நிலையை அடைகிறான்.

## Advertisement


### மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS

Wings of Wisdom

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

Unlimited Books Starts @ INR 1200/.

| Scheme | Books at a Time |
|---|---|
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |

Door Delivery Available*

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 / VALASARAVAKKAM 42105700 / PORUR 42107304 / OMR 42863478 / VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

Suriyaa Digital
Porur - 9677227755

# தற்போத ஒழிவு

*அன்பு ஆன்மநேய சகோதர சகோதரிகளே!*

*"தன்னைக் காட்டாது ஒழிக்க வேண்டும். தன்னை மதியாதிருத்தல்" இவை ஆன்மீக சாதனை மேற்கொள்ளும் சாதகருக்கு இன்றியமையாதது என நம் வள்ளல் பெருந்தகை வலியுறுத்திக் கூறுவார்.*

*ஏனென்றால் சமுதாயத்திற்கு தன்னை அடையாளம் காட்டிக் கொள்வதும், சமுதாயத்தில் உள்ளோரெல்லாம் தன்னை மதிக்க வேண்டும் என்று நினைப்பதும் அகங்கரத்தின் வெளிப்பாடாகும். இந்த அகங்காரம் உள்ள ஒருவனால் ஆன்மீக சாதனையில் முதிர்ச்சி அடைய முடியாது. இதை விளக்கும் நீதிநெறிக் கதையினை இங்கே காண்போம்.*

*அதுவொரு நண்பகல் நேரம். தச்சுப்பட்டறைக்குள் ஒரு நீண்ட பாம்பு புகுந்துவிட்டது. உணவருந்த தச்சன் உணவு விடுதிக்குச் சென்றிருந்த நேரம் அது.*

*உள்ளே நுழைந்த பாம்பு ஒரு ரம்பத்தின் மீது ஏறி இறங்கியது. அப்போது பாம்பின் வால் பகுதியில் காயம் ஏற்பட்டது. உடனே அந்த பாம்பு ரம்பம் தனக்கு துன்பம் இழைத்துவிட்டதாக எண்ணி அதை கோபத்தோடு கொத்தியது. ரம்பத்தின் கூர்மையான பகுதி பாம்பின் வாயில் பட்டு மேலும் காயத்தை ஏற்படுத்தியது.*

*இப்போது பாம்பிற்கு மேலும் கோபம் அதிகரித்தது. தொடர்ந்து நான்கு ஐந்து முறை ரம்பத்தை ஆவேசத்துடன் தாக்கியது. இதன் காரணமாக பாம்பின் வாய் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டு இரத்தம் வழியத் தொடங்கியது. கோபத்தின் உச்சத்திற்கே சென்ற பாம்பு தனது நீண்ட உடலால் அந்த ரம்பத்தைச் சுற்றி வளைத்து இறுக்கி அதை அழித்துவிடலாம் என்று எண்ணி ரம்பத்தைச் சுற்றி வளைத்து இறுக்கியது.*

*பாம்பின் இந்த அறிவற்ற செயலால் உடல் கிழிந்து தன் உயிரை நீத்தது.*

*இவ்விதம்தான் அன்பர்களே நாமும் 'நான்' என்கிற அகங்காரத்தால் அறிவிழந்து செய்வதறியாது துன்பத்தில் உழன்று அழிந்து போகிறோம்.*

*இந்த அகங்காரத்தால் அழிவு நேரிடும் என்பதற்கு வேதத்தில்*

மற்றுமோர் கதையையும் உதாரணமாகக் காட்டுவார்கள்.

அதாவது, தீக்குச்சியும், தீப்பெட்டியும் பேசிக் கொண்டன.

தீக்குச்சி: தீப்பெட்டியே நீயும் நானும் உரசிக் கொள்கிறோம். ஆனால் இங்கு நீ மட்டும் அப்படியே இருக்கிறாயே. அது எப்படி? என்றது.

தீப்பெட்டி: தீக்குச்சியே உன் தலையைப் பார். கணம் இருக்கிறது. தலைக்கணம் இருந்தால் எரிந்து சாம்பலாகத்தான் செய்வாய் என்று கூறியதும் தீக்குச்சி வெட்கித் தலைகுனிந்தது.

இத்தகைய கொடுமையான அகங்காரத்தை ஒழிக்கவே முன் சொன்ன இரண்டு சாதனங்களைக் கொடுத்தார் நம் வள்ளல் பெருந்தகை.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். குறள்(121)

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க அகங்காரம் என்பது கோடி எமன் சேர்ந்ததற்கு ஒப்பானதென்று நம் வள்ளல் பெருமானார் எடுத்துரைக்கின்றார்.

சாதாரணமாக உலகியல் கல்வியைக் கற்றவர்களே செருக்கு மிகுந்தவர்களாக இருக்கக் காண்கிறோம். அப்படியிருக்க ஆன்மீகச் சாதனையில் ஈடுபடும் ஒரு சாதகருக்கு அவர்களைக் காட்டிலும் செருக்கு மிகுவது இயல்பு. எனவேதான் வள்ளுவப் பெருந்தகையும்

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின். குறள்(123)

என்கிறார். அஃதாவது கற்றறிய வேண்டியவற்றை அறிந்து நல் வழியிலேயே அடங்கி வாழ்ந்தால் அவ்வடக்கமே சிறந்த புகழைத் தரும் என்பதாம்.

மேலும் இவ்வகங்காரத்தின் தன்மைகள் என்னவென்பதை நம் பெருமானார் குடும்ப கோரம் எனும் தலைப்பில் அருளியுள்ளதைக் காண்போம்.

அகங்காரம் எனும் அடங்காக்காளை மனம், புத்தி, சித்தம் எனும் மூன்றையும் ஓயாமல் முடுக்கிவிட்டு அனேக வினைகளைச் செய்ய வைக்கும்.

இந்த அகங்காரம் உள்ளவர்கள் தனக்கு எல்லா ஆற்றலும் இருப்பதாக தர்க்கவாதம் செய்வார்கள். தன்னைத் தானே

மதிப்பார்கள். தன்னை யாரும் மதிக்காமல் போனால் கோபம் கொள்வார்கள். இவ்வுலகில் தனக்கு நிகர் யாரும் இல்லை என்று செருக்கு கொள்வார்கள். ஒரு தாயின் வயிற்றில் பிறந்தோம் என எண்ணாது தானே பிறந்த தன்மைபோல் பேசுவார்கள்.

விடிய விடிய வீண்வாதம் செய்வார்கள். இதை முடித்துவிடுவேன், அதை முடித்துவிடுவேன் என வாயால் வீர வசனங்கள் பேசுவார்கள். சொல் பேச்சைக் கேளாத துரியோதனன் போல் வானவரேயாயினும் அவர்களை மதிக்காமல் நடப்பர். இதுதான் அகங்காரத்தின் இயல்பு.

இந்த அகங்காரத்தால் என்ன விளைவு ஏற்படப்போகிறது என்று நினைக்கிறீர்களா? இதோ நம் பெருமானார் இதற்கு பதில் அளிக்கின்றார்.

இந்த உலகத்தில் ஏழை, பணக்காரர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஆண், பெண் என அனேக ஜீவர்கள் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் அவரவர் தரத்திற்கு ஏற்றாற்போல் துன்பமும் உண்டு. ஆனால் நம் பெருமானார் இவர்கள் அனைவருக்கும் ஒரேவொரு பிணிதான் உள்ளது என்கிறார். அது என்னவென்றால் தன்னையறியா பிணி.

இதனையே சித்தர் திருமூலரும் இதனையே “தன்னையறிய தனக்கொரு கேடில்லை; தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்” என அருளிச் செய்துள்ளார்.

நம் பெருமானாரோ **“ஞானமணிப் பொதுநடம்செய் திருவடி கண்டிடவே”** எனும் திருஅருட்பாவில் **“ஈனமுறும் அகங்காரப் புலி குறுக்கே வருமோ”** எனப் பாடியுள்ளார். இவ்விதம் நாம் யாரென்று அறியமுடியாத வண்ணம் மறைப்பது இந்த அகங்காரம்.

ஆன்மாக்களாகிய நமக்கு ஆன்ம விளக்கமும், அருள் விளக்கமும் இல்லாதிருப்பதே மிகப் பெரிய அவஸ்தை. இந்த அவஸ்தையை உண்டுபண்ணுவது அகங்காரம்.

அப்படிப்பட்ட அகங்காரத்தை வெட்டியெறிய செடியோ அல்லது மரமோ அல்ல. அது வேர். வேர் மட்டுமல்ல கொடுங்கிழங்கு. அதை அகழ்ந்தெறிய தீவிரமான வைராக்கியமும், ஞானமும் வேண்டும். அதைத்தான் சன்மார்க்கம் காட்டுகிறது. இதற்குச் சான்றாக தத்துவ வெற்றி எனும் தலைப்பில் வரும் திருஅருட்பாவைக் காண்போம்.

**அகங்காரம் எனும்பொல்லா அடவாதிப் பயலே**
**அடுக்கடுக்காய் எடுக்கின்றாய் அடுத்துமுடுக்கின்றாய்**
**செகங்காணத் தலைகாலும் தெரியாமல் அலைந்து**
**திரிகின்றாய் நின்செபந்தான் சிறிதும் நடவாது**
**இகங்காண அடங்குகநீ அடங்காயேல் கணத்தே**
**இருந்தஇடம் தெரியாதே எரிந்திடச் செய்திடுவேன்**
**சுகங்காண என்றனைநீ அறியாயோ நான்தான்**
**சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றபிள்ளை காணே** *தத்துவ வெற்றி (8)*

*மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்கின்ற அந்தக்கரணங்கள் நான்கில் நான்கவதாகிய அகங்காரம் இப்பாடலால் கண்டிக்கப்படுகிறது.*

*அகங்காரம் என்கின்ற பொல்லாத பிடிவாதப் இயல்புடையவனே! பொருள்களை அடுக்கடுக்காய்க் கண்டு அக்காட்சியிலே என்னை அடுத்தடுத்து முடுக்க முயல்கின்றாய். உலகத்தார் யாவரும் காணத் தலைகால் தெரியாது அலைந்து திரிகின்ற நின் செயல்கள் ஒன்றும் என்னிடம் செல்லாது. இந்த உலகம் முழுவதும் காணுமாறு என்னிடம் நீ அடங்கி நடத்தல் வேண்டும். அடங்காது போனால் இமைப் போதில் நீ இருந்த இடம் தெரியாதபடி பொசுக்கிக் கெடுத்துவிடுவேன். சுகம் பெற வேண்டுமேல் என்னை நன்கறிந்து ஒழுகவேண்டும். நான் யார் எனில் சுத்த சிவ சன்மார்க்கத்திற்கு ஞானம் நிறைந்த பிள்ளையாவேன் என்று உணர்க. இவ்வண்ணம் அகங்காரத்தை விரட்டியடிக்கிறார் நம் பெருமானார்.*

*நம்போன்ற ஆரம்ப சாதகர்கள் ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைபிடித்து சதா அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை நினைத்து தோத்திரம் செய்தும், பக்தி செய்தும், தன் மதிப்பில்லாமலும், தான் சாதனை செய்கிறோம் என்பதை காட்டிக் கொள்ளாமலும் மறைத்துக் கொள்வதே மேல்நிலை அடைவதற்கு வழியாகும்.*

**நற்குண ஒழுக்கங்கள்**

**1. நல்லறிவு** **2. கடவுள் பக்தி** **3. உயிரிரக்கம்**
**4. பொது நோக்கம்** **5. திரிகரண அடக்கம்**
*முதலானவை நற்குண ஒழுக்கங்கள்.*

**நற்செய்கை ஒழுக்கங்கள்**

**1. உண்மை உரைத்தல்** **2. இன்சொல்லாடல்**
**3. உயிர்க்கு உபகரித்தல்** *முதலானவை நற்செய்கை ஒழுக்கங்கள்.*

# அருட்பெருஞ்ஜோதி அகவல் உணர்த்தும் உண்மை நெறி

**உயிருள்யாம் எம்முள் உயிர் இவைஉணாந்தே**
**உயிர்நலம் பரவுக என்று உரைத்த மெய்ச்சிவமே**

*உயிரினம் ஒவ்வொன்றிலும் இறைவன் இருக்கிறார். எல்லா உயிர்களும் இறைவனுக்குள் உள்ளது. இவ்விதம் எல்லா உயிர்களும் கடவுள் விளங்கும் ஆலயமாகக் கருதி உயிர்கட்கு இரங்கி நலமே புரிய வேண்டும் என்று அருட்பெருஞ்ஜோதி இறைவன் உபதேசித்து அருளினார். நலம் புரிவது மட்டுமன்றி அவற்றிற்குள்ள நலம் கெடாதவாறு பாதுகாத்தல் வேண்டும்.*

**பயிர்ப்புறு கரணப் பரிசுகள் பற்பல**
**உயிர்த்திரள் ஒன்றென உரைத்த மெய்ச்சிவமே**

*மனம், சித்தம், அகங்காரம், புத்தி என்ற நான்கும் கரணங்களாகும். பற்றுதல், சிந்தித்தல், தெளிதல், உண்மை உணர்தல் இவை இக்கரணங்களின் செயல் வகைகள். உயிர்தோறும் கரணங்கள் உளவாயினும் செயல் வகையில் வேறுபடுகின்றன. ஓர் உயிரின் கரணம்போல் மற்றொன்றின் கரணம் இருப்பதில்லை. ஆயினும் தன்மை வகையில் எவ்வுயிரும் ஒன்றே என்பது இவ்வரிகளின் பொருள்.*

**உலகினில் உயிர்களுக்கு உறும் இடையூறெலாம்**
**விலகநீ அடைந்து விலக்குக மகிழ்க**

**சுத்த சன்மார்க்க சுகநிலை பெறுக**
**உத்தமன் ஆகுக ஓங்குக என்றனை**

*உலகில் உள்ள உயிர்கள் உற்று வருந்தும் இடையூறுகளைக் கண்டு சும்மா இராது, அவை நீங்குதற்கேற்ற செயல்களைப் புரியவேண்டும். அவ்விதம் அத்துன்பம் விலக்கியவிடத்து உயிர்கள் எய்தும் இன்பம் கண்டு நீயும் இன்புற வேண்டும். இதுவே சுத்த சன்மார்க்கமும் அது விளைவிக்கும் இன்ப நிலையுமாம். இச்சுத்த சன்மார்க்க நன் ஞானமும், நற்செயலும் மேற்கொள்வதே சன்மார்க்கத்தல் உத்தம நெறியாம்.*

*திருச்சிற்றம்பலம்*

# மகாகவியின் உயிரிரக்கம்



– பாரதியாரின் கட்டுரை தொகுப்பிலிருந்து...

ஸர்க்கஸ் கம்பெனிகளிலே புலி, சிங்கம், யானை, கரடி முதலியவைகளைப் பூனைக்குட்டிகள் போல பழக்கி வைத்து விடுவார்கள். ‘கந்துக மதக் கரியை வசமாய் நடத்தலாம்; கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்; ஒரு சிங்க முதுகின்மேல் கொள்ளலாம் கட்செவியெடுத்து ஆட்டலாம்’ என்று தாயுமானவரும் சொல்லியிருக்கின்றார்.

மனுஷ்ய சரித்திரம் எழுதப்பட தொடங்கிய காலத்திற்கு முன்னே, மனிதற்கிடையே எழுத்துத் தொழில் பழக்கப்பட தொடங்கிய காலத்திற்கும் வெகு காலத்திற்கு முன்னரே, மனிதர் மற்ற மிருகங்களுடன் போராடிப் போராடி வென்று வென்று தம் மேன்மையை நிலை நிறுத்திக்கொண்டனர். காட்டில் மனிதன் கிழங்குகள் பறித்துண்ணப் போனவிடத்தில் தனியாகவும், மற்ற மனிதருடனும் தனிப்பட்ட அல்லது கூட்டமாக வந்து நின்ற காட்டுப் பன்றிகளுடன் போராடி அவற்றைச் சில சமயங்களில் வென்றும் சில சமயங்களில் அவற்றாலே கொல்லப்பட்டு மடிந்தும் வந்து கொண்டிருந்தான்.

கடைசியாகக் காட்டுப் பன்றிக் குலம் தோல்வியை அங்கீகரித்துக் கொண்டது. இங்ஙனமே கணக்கற்ற கணக்கற்ற கணக்கற்ற துஷ்ட மிருகங்களுடனும் போராடிப் போராடி மண்ணுலகத்தின்மீது மனிதனே அரசனாகவும் மற்றைய பிராணிகளெல்லாம் இங்கு வாழ்வதற்கு இயற்கை உரிமை இல்லாத (அதாவது, மனிதக் கூட்டத்தார் இஷ்டப்பட்டு உயிர் தரித்திருக்க இடம் கொடுத்தால் உயிர் வாழலாம். இல்லாவிட்டால் ஜீவித்திருக்கும் பாத்யதை அவற்றுக்கில்லையென்று மஹா நீசத் தண்டனை மனித குலத்தால் விதிக்கப் பெற்ற) அடிமைக் குடிகளாகவும் ஏற்படும் நிலைமை உண்டாயிற்று. இவற்றுள்ளே மனிதனைக் கொல்லக்கூடிய வலிமை படைத்தன சில குலங்களும். மனிதனாற் கொல்லப்படத்தக்க, மனிதனைக் காட்டிலும் பலம் குறைந்த மிருகங்கள் கணக்கற்றன.

இத்தனை மிருகங்களையும் மனிதன் தந்திரத்தால் அடிமைப்படுத்திவிட்டான். கைபலத்தால் ஆட்டை கொன்றான். வில்லின் பலத்தால் புலியைக் கொன்றான். இரண்டு சிக்கிமுக்கிக் கல் துண்டுகளை ஒன்றுக்கொன்று தட்டினால் தீயுண்டாக்கி விடலாம். இத்தனை கோடானு கோடி அடிமை ஜந்துக்களுக்கும் இன்று வரை இந்த சாதாரண யுக்தி புலப்படாமல் போனது வியப்புக்குரிய செய்தியன்றோ? இதுபற்றியே முற்கால ரிஷிகள் தீயை முதற் கடவுளாகப் போற்றினர் போலும். மனிதனுக்கு இங்ஙனம் கிடைத்த வெற்றியையும் பூமண்டலாதிக்கத்தையும்

அவன் நியாயமான வழியில் உபயோகப் படுத்தவில்லை. குடிகளைப் பட்டினி போட்டுவிட்டு தான் தீர்வை கறந்து வாங்கித் தன் வயிற்றில் அஜீரணமுறப் புதைக்கும் கொடுங்கோலரசனைப் போல தன் குடிகளாகிய மிருக பக்ஷி கீடங்களில் பலவற்றைத் தின்று பிழைக்கும் ஈன வழக்கத்தைக் கைக்கொண்டிருக்கின்றான். மனிதன் செய்யும் அநியாயங்களில் மாமிச உணவே மிகவும் இழிவான அநியாயமென்று என் புத்திக்கு நிச்சயமாகப் புலப்பட்டிருக்கிறது. மனிதன் செய்யக்கூடிய பாபங்கள் அனைத்திலும் இதுவே மிகக்கொடிய பாபம் என்று என் புத்திக்கு ஐயந்திரிபற விளங்கியிருக்கிறது.

மிருகங்களை நமக்கு சகாக்களாக வைத்துக்கொண்டால், அவற்றால் எண்ணிறந்த பயன்கள் எய்தலாம். அவற்றை நாம் அடிமைகளாக்கி விட்டோம். ஒரு அரசன் தன் குடிகளை அடிமைகள் போலே நடத்துகின்றான். அவர்களுக்கு நல்ல சோறு கிடைக்காமல் இருக்கும்போது தீர்வையை உறிஞ்சுகின்றான். அவர்களுக்கு ஸ்வதந்திரம் கொடுக்கவில்லை. நாகரிகம் கொடுக்க விரும்பவில்லை. மற்றொரு அரசன் தன் குடிகளைத் தனக்கு சமானமான அந்தஸ்துடையவர்களாக மதிக்கிறான். கொஞ்சமாக தீர்வை வாங்கிக்கொண்டு, குடிகளுக்குச் சோற்றுப்பயமில்லாமலும், பஞ்ச மரணங்கள் இல்லாமலும் காப்பாற்றுகிறான். அவர்களுக்கு எல்லாவித மனுஷ்ய ஸ்வதந்திரங்களும் ஜீவாதார உரிமைகளும் கொடுத்து மேன்மை படுத்துகின்றான். கல்வி, காட்சி முதலிய பல்வகை பயிற்சிகளாலும் அவர்களை எல்லா விதங்களிலும் எப்போதும் நாகரீகப்படுத்த விரும்புகின்றான்.

முதற்சொன்ன ராஜாவுக்கு ஏதேனும் ஆபத்துக்காலம் நேரிட்டால் அப்போது அவனுடைய குடிகள் எல்லாவிதத்திலும் பயன்படமாட்டார்கள். அந்த ஆபத்தை சகல விதங்களிலும் மிகுதிப்படுத்த முயற்சி செய்வார்கள்.

இரண்டாவதிற் சொன்ன ராஜா, தன் குடிகளை நடத்தும் நேர்மையினாலேயே மிகவும் பலம் பொருந்தியவனாய் எவ்வித ஆபத்திற்கும் உட்படாமலே நல்வாழ்வு வாழ்ந்திருப்பான்.

மனிதன், மிருகங்களாகிய தன் தோல்வியுற்ற குடிகளின் விஷயத்தில், இரண்டாவது சொன்ன ராஜாவைப்போல் நடந்து கொள்ளாமல் முதற் சொன்ன ராஜாவைப்போல் நடந்து கொண்டு வருகிறான். மிருகங்களும் பரஸ்பரம் தின்னுகின்றன என்பதைச் சில மனிதர் தாம் செய்யும் மாமிஸ போஜனத்திற்கு ஆதாரமாகச் சொல்லுகின்றார்கள். ‘யதா ராஜா ததா ப்ரஜா’ அரசன் எப்படியோ அப்படியே குடிகளும். அரசனே குடிகளைத் தின்றால், குடிகள் தம்மால் இயன்றவரை கொன்று தின்னாமல் விடுவார்களா?

மிருகங்கள் சர்க்கஸ் கம்பெனியில் பழக்கப்பட்டு வரும் மாதிரியைப் பார்த்தால், அவற்றின் உதவியைக் கொண்டு நாம் எத்தனையோ புதிய புதிய வழிகளில் காரிய சாதனை செய்து கொள்ள வழிகள் கண்டு பிடிக்கலாம் என்பது விளங்குகிறது.

அவற்றைத் துணைவர்போல நடத்தி மிகவும் வலிய வாழ்வு வாழ்வீர்களா? அன்றி, அவற்றை அடிமைகளாக நடத்தி வருந்துவீர்களா? மனிதர்களே, உங்களுக்கு எந்த வழி சம்மதம்?

உண்மையாக அவற்றை நாகரீகப்படுத்தி அவற்றால் வாழ்வை பல துறைகளிலும் அதிகம் பயன்படச் செய்ய விரும்புவீர்களேயானால், அதற்கு ஓர் மார்க்கம்தான் இருக்கிறது. அதாவது அன்பு.

மனிதனை சீர்திருத்த லக்ஷத்தொன்று உபாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மிருகங்களை சீர்திருத்த நாம் முயற்சி செய்யவில்லை. கோயில், குளம். அரண்மனை, நீதிஸ்தலம், வீடு, மன்று முதலிய எண்ணற்ற விதங்களால் மனிதர் தம்மைத்தாமே சீர்திருத்திக்கொள்ள முயல்கின்றார்கள். பள்ளிக்கூடமே உபாயம் என்றும், சகல மனுஷ்யருக்கும் எழுத்துப் படிப்பு சொல்லித்தீர வேண்டும் என்றும் ஐரோப்பிய கல்வி நிபுணர்கள் சித்தாந்தம் பண்ணுகிறார்கள். இது நிற்க, மிருகங்களையோ முதலாவது தின்கின்றோம். ஆடு, கோழி, மாடு, காடை, கவுதாரி, புறா, குயில், குருவி, வாத்து, பன்றி, மான் முதலிய பல ஜந்துக்களை உயிரோடு வெட்டித்தின்கின்றோம்; வேட்டையாடுகின்றோம். யானை முதல் முயல் வரை பல ஜந்துக்களை புலி, கரடி, சிங்கங்களைத் துஷ்ட மிருகங்கள் என்றும், ஊரும் பாம்பு, தேள் முதலிய துஷ்ட ஜந்துக்கள் என்றும் நாம் சொல்கிறோம். ஏன்? அவை நம்மை கொல்வதனாலே.

எத்தனையோ ஜந்துக்களை நாம் கொல்லுகிறோம். நமக்கு மிருக பாஷைகளில் என்ன பெயரோ? துஷ்ட மனிதன் என்ற பெயரிருக்கலாம். பசுக்களையும் மாடுகளையும் நாம் வதைக்கிறோம். நமக்கு வதைப்பதில் எத்தனை சுதந்திரமோ அவ்வளவு சுதந்திரம் அவற்றிற்கும் உண்டு. நீ மிருகத்தை விட அதிக புத்திசாலி என்று நினைத்தால் அதைச் சீர்திருத்து. அப்படியே சீமையில் சில குரங்குகளை சில சர்க்கஸ் கம்பெனியார் கால் சட்டை, கோட், தொப்பி, கண்ணாடி, பூட்ஸ் வகையறா மாட்டி, சாராயம் கொடுத்து, சிகரெட் பிடிக்கச் சொல்லி, உடுப்பு மாட்டி, உடுப்பு கழற்றி மேஜையில் தீனி தின்று அமளிப்படுத்தும்படி கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். அனால், ஆதைக் காட்டி காசு வாங்கி மனிதன் பிழைத்திருக்கிறான்.

இரக்கத்தை காணோம். அவை பரஸ்பரம் ஹிம்சை இல்லாமல் எல்லாம் எல்லாவற்றின் ஹிதார்த்தமாக வாழ்விக்க உபாயம் உண்டாக்கலாம். நமது முன்னோர் பசுவை மாதா என்று சொல்லி வணங்கினார்கள். நாம் அவர்களை சமத்துவம், விடுதலை, உடன்பிறப்பு தெரியாத மூடர்கள் என்று சொல்லி மேற்படி பசுக்களை கறி சமைத்துத் தின்ன இச்சிக்கிறோம். அதன் பாலை ஊட்டி நம்முடைய குழந்தைகளை வளர்த்தோம். நம் தாயானவள் நமக்கு ஒருவயது வரைதான் பாலூட்டுவாள். ஆனால் பசுவோ நாம் சாகும்வரை பாலூட்டி நம்மை வளர்க்கிறதே. இந்த நினைப்பில்லாமல் நன்றியுணர்வுமில்லாமல் ஏன்

வாழ்கின்றோம். மாட்டை நாம் தாய் போலே நினைப்பது இல்லையே. குயில் பாடுகிறது. கந்தர்வர் கேட்டு தலை அசைக்கிறார்கள். நீ ஏன் அம்பு போட்டு அதை கொல்லுகிறாய்? மிருகங்களிடம் அன்பு காட்டி அவற்றை நல்லவழியில் நடத்துவது மிகவும் அவசியம்.

தன்னைத்தானே திருத்திக் கொள்ளாதவன் பிற ஜந்துக்களை திருத்த அதிகாரம் பெறமாட்டான். தன்னைத்தானே திருத்திக்கொள்வதே பிரதானம். தன்னைத் திருத்தி அமரனாக செய்து கொள்க. அதுவே ஒருவன் செய்ய வேண்டிய தலைமைத் தொழில்.

# மூத்தோர் சொல் அமிர்தம்

ஒரு குடியானவனுக்கு நான்கு மனைவிகள். அலுவல் நிமித்தமாக வெளியூர் செல்லவேண்டிய கட்டாயம் அவனுக்கு ஏற்பட்டது.

நான்காவது மனைவியிடம் சென்று "நான் வெளியூர் செல்கிறேன். அங்கிருந்து உனக்கு என்ன வாங்கி வரவேண்டும்?" என்று கேட்டான்.

அதற்கு அவள் ஒரு காகிதத்தில் பட்டியல் தயார் செய்து "இந்த நகைகளை வாங்கி வாருங்கள்" என்று கொடுத்தாள்.

அடுத்து மூன்றாவது மனைவியிடம் சென்று "உனக்கு என்ன வாங்கிவர வேண்டும்?" என்று கேட்டான்.

அதற்கு அவளும் ஒரு காகிதத்தை எடுத்து பட்டியல் தயார் செய்து "இந்த புத்தகங்கள் இருந்தால் வாங்கி வாருங்கள்" என்றாள்.

இரண்டாவது மனைவியிடம் சென்று இதேபோன்று கேட்டான். அதற்கு "அங்கு அழகான சேலைகள் இருந்தால் வாங்கி வாருங்களேன்" என்று அவளும் ஒரு பட்டியலைக் கொடுத்தாள்.

இறுதியாக முதல் மனைவியிடம் சென்று "நான் வெளியூர் செல்கிறேன். மூவரும் தங்களுக்குத் தேவையானதை கூறிவிட்டார்கள். உனக்கு ஏதேனும் வாங்கிவர வேண்டுமா?" என்று கேட்டான்.

அதற்கு அவளோ "எனக்கு எந்த ஆசையும் இல்லை. நீங்கள் நல்லவிதமாக பயணம் மேற்கொண்டு ஆரோக்கியத்தோடு திரும்பி வாருங்கள் அதுவே போதும். இந்த உலகத்தில் எனக்கு உங்களை விடவும் பெரிய பொருள் எதுவும் இல்லை" என்று கண்ணீர் மல்கக் கூறினாள்.

அவளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு தனது பயணத்தை மேற்கொண்டான். சிலமாதங்கள் கழித்து தனது மூன்று

*மனைவியரும் கேட்ட பொருட்களையெல்லாம் வாங்கிக் கொண்டு வீடு திரும்பியவன் மூவரையும் அழைத்து அவரவரிடம் அவரவர் விரும்பிய பொருட்களைச் சேர்த்தான்.*

*பின்னர் முதல் மனைவியிடம் சென்று அவள் கைகளை அன்போடு பற்றிக் கொண்டு வெளியே புறப்பட்டான்.*

*இதைக் கண்ட மூவரும் "எங்கே போகிறீர்கள்?" என்று வினாவினர்.*

*அதற்கு அவன் "நான் வெளியூர் செல்லும் போது உங்கள் மூவரிடமும் என்ன வேண்டும் என்று கேட்டேன். அதற்கு நீங்கள் உங்களுக்கு பிடித்தவற்றை கேட்டீர்கள்.*

*ஆனால் இவள் ஒருத்திதான் நான் மட்டும் நல்லவிதமாக திரும்பி வந்தால் போதும். நீங்கள் மட்டும்தான் எனக்கு பெரிய பொருள். எனக்கு வேறெதும் வேண்டாம் என்றாள்.*

*ஆகவே நீங்கள் மூவரும் விரும்பிய பொருளை நான் கொடுத்துவிட்டேன். இப்போது இவள் விரும்பிய பொருளாகிய என்னை இவளிடம் கொடுக்க வேண்டும் அல்லவா. எனவே இவளோடு நான் செல்கிறேன்" என்று கூறி முதல் மனைவியோடு அந்த வீட்டை விட்டு வெளியேறினான்.*

*அன்பு உள்ளங்களே! நாமும் நம் வாழ்நாளில் இறைவனிடம் பிரார்த்தனை என்ற பெயரில் எதையெதையோ பட்டியலிட்டு கொடுக்கிறோம். அவரவர் செய்த வினைக்குத் தக்கபடி அவற்றையெல்லாம் கடவுளும் அளித்து அருள் பாலிக்கிறார்.*

*ஆனால் யாரொருவர் உலகப் பொருட்களில் பற்றுதலின்றி இறைவனை மட்டுமே வேண்டுகிறார்களோ அவர்களுக்கு தன்னையே அளித்து பேரின்ப சுகத்தை அளிக்கிறார்.*

**"இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள். எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள்" என்ற திருவார்த்தை அதனால் தலைவனைத் தொழுவது ஒன்றே தொழிலாக உடையது கடமை.**

*- திருஅருட்பா வசனபாகம்.*

*திருச்சிற்றம்பலம்*

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

*முன்பு ஒரு காலத்தில், ஒரு மன்னனுக்கு மனித குலம் தோன்றிய காலம் முதல் இன்றுவரையுள்ள எல்லோரின் வரலாறு முழுவதையும் படிக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. எனவே தன் நாட்டிலுள்ள அறிஞர்களை அழைத்து இதற்கான செலவு மற்றும் கால அளவு ஆகியவற்றைக் கணிக்குமாறு கூறினான். அந்தக் குழு அவர்களுக்குள் விவாதித்து, பின்னர் அவர்களில் மூத்தவர் வந்து மன்னனிடம், "அரசே, நீங்கள் விரும்பும் இந்தத் திட்டத்தில் ஏராளமான வேலை இருக்கிறது, நிறைய நேரமும் தேவை. ஆனாலும் இதை முடித்துவிடலாம். சுமார் இருபது வருடங்களும் இருபதாயிரம் பொற்காசுகளும் தேவைப்படும்" என்று கூறினார். செலவும் நேரமும் அதிகமாக இருந்தாலும், மன்னனின் ஆசை அதனினும் பெரிதாக இருந்ததால் இதை ஏற்றுக்கொண்டான். பணத்தை அளித்துவிட்டு காத்திருக்கத் தொடங்கினான். அப்போது அவனுக்கு ஐம்பது வயது.*

*பின்னர் பண்டிதர்கள் தாங்கள் ஒருங்கிணைத்த மனிதகுல வரலாற்றை 2000 நூல்களில் வடித்து 20 யானைகள் மீது ஏற்றி வந்தபோது மன்னன் தனது எழுபதாவது பிறந்த நாளை எதிர் நோக்கி இருந்தான். காலம் அவனது பார்வைத் திறனையும் கேட்கும் திறனையும் ஏன் ஆரோக்கியத்தையும் கூட வெகுவாகக் குறைத்திருந்தது. இதைப் படிக்க பத்தாண்டு காலம் பிடிக்கும் என அறிஞர்கள் தெரிவித்ததைக் கேட்ட மன்னன், "என்ன பத்து வருடங்களா? இதில் மூன்றில் இரண்டு பாகம் முடிப்பதற்குள் என் ஆயுளே முடிந்துவிடும். இதை பத்தில் ஒரு பங்காக சுருக்கித் தரமுடியுமா?" என்றான். அதற்கு அறிஞர்கள் அனைவரும் கலந்து பேசி, சுமார் ஐந்து வருடங்களும் 5000 பொற்காசுகளும் ஆகும் என்றனர். அரசனும் வேறு வழி இல்லாமல் அதை ஏற்றுக்கெண்டான்.*

*ஐந்து வருடங்கள் கழித்து 200 நூல்களுடன் அறிஞர்கள் ஒரு மாட்டு வண்டியில் வந்தபோது அரசனின் ஆரோக்கியம் மேலும் குறைந்து, நகரமுடியாத நிலையில் இருந்தான். இந்த நூல்களை அவனால் பார்க்கக் கூட முடியவில்லை. புத்தகத்தோடு வண்டியில் வந்த பண்டிதர்களிடம் மன்னன், "மிக்க நன்றி. ஆனால் இத்தனை பெரிய நூல்களை என்னால் படிக்க இயலாது. நீங்கள் படித்துக்காட்டினாலும் அதற்கும் நீண்ட நேரம் தேவைப்படும். அவ்வளவு பெரியதாய் இருக்கின்றன. இதை மேலும் சுருக்கி மூன்று நூல்களாகத் தர முடியும் என்றால் நலமாக இருக்கும்" என்று கூறினான். அதற்கு அறிஞர்கள் மன்னனிடம், ஒரு வருட*

*காலத்தில் 1000 பொற்காசுகள் செலவில் அதை முடிக்க முடியும் என்று உறுதி அளித்து விட்டுச் சென்றனர்.*

*ஒரு வருடம் கழித்து மூன்று பெரும் நூல்களுடன் அறிஞர்கள் வந்தபோது அரசன் தனது இறுதித் தருவாயில் இருந்தான். வைத்தியர்கள் அவனைப் பிழைக்க வைக்க அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தனர். அந்த நூல்களைக் கண்ட அரசன், "இவ்வளவு பெரிய நூல்களா! இதை படிப்பதற்குள் என் மூச்சு நின்றுவிடுமே! இத்தனை நாள் நான் பட்ட கஷ்டமும் செய்த செலவும் வீண். என்னால் மனித குல வரலாற்றை அறிந்துகொள்ள முடியாதே" என்று முனகினான்.*

*இதைக் கேட்ட அந்த அறிஞர் கூட்டத்தில் இருந்த ஒரு அறிவாளி மன்னனின் மன வருத்தத்தைக் கண்டு, "அரசே! அப்படி அல்ல. மனித வரலாற்றை நான் சுருக்கமாக உங்கள் காதுகளில் கூறமுடியும்" என்றார். அதற்கு "உடனே கூறுங்கள்" என்று ஆணையிட்டான் மன்னன்.*

*உடனே அந்த அறிஞர் குனிந்து மன்னனது காதுகளில்,* **"மனிதன் பிறந்தான், உணவு உண்டான், பின்னர் இறந்தான். இதுதான் மனித குல வரலாறு"** *என்று கூறினார். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த மன்னன்,* **"இவ்வளவுதானா வாழ்க்கை?"** *என்றவாறு மீளாத் துயிலில் ஆழ்ந்தான்.*

சாகாத கல்வியே கல்வி ஒன்றே சிவம்
தான்என அறிந்த அறிவே தகும் அறிவு
மலம் ஐந்தும் வென்ற வல்லபமே
தனித்த பூரண வல்லபம்
வேகாத காலாதி கண்டு கொண்டு எப்பொருளும்
விளைய விளைவித்த தொழிலே
மெய்த்தொழிலதாகும் இந்நான்கையும் ஒருங்கே
வியந்தடைந்து உலகம் எல்லாம்
மாகாதலுற எலாம்வல்ல சித்தாகி நிறைவான
வரமே இன்பமாம் மன்னும்இது
நீபெற்ற சுத்த சன்மார்க்கத்தின்
மரபென்று உரைத்த குருவே
தேகாதி மூன்றும்நான் தருமுன் அருள் செய்து எனைத்
தேற்றி அருள்செய்த சிவமே
சிற்சபையின் நடுநின்ற ஒன்றான கடவுளே
தெய்வநடராஜ பதியே. — திருஅருட்பா

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் வள்ளல் பெருமானார் அருளிய

# முத்தி சித்தி உபாயம்



உலகச் சேற்றில் உழல்பவரைச் சாராது சாதுக்கள் சங்கத்தை சேர்தல் வேண்டும்.

↓

இச்சேர்க்கையினால் சத்விசாரம் செய்யும் எண்ணம் உண்டாகும்.

↓

இச்சத்விசாரத்தால் போகம் முற்றும் பொய் என்ற நித்திய அநித்திய விவேக அறிவு உண்டாகும்.

↓

இதனால் இவ்வுலகம் ஈன உலகம் என்று தெளிந்து நம்மை பிறவியெனும் பெருங்கடலிலிருந்து மேலேற்றும் திருவருளைப் பெறவதற்குரிய ஞானம் விளங்கும்.

↓

இந்த ஞானத்தால்தான் உலகப் பழக்க வாசனை மாறும்.

↓

பழக்க வாசனை மாறினால்தான் 'நான்', 'எனது' என்ற பற்று நீங்கும்.

↓

இந்த பற்று நீங்கினால்தான் பற்று அற்றவனாகிய அருட்பெருஞ்ஜோதி இறைவனின் திருவடியை பற்ற முடியும்

↓

பின்புதான் அருள் வள்ளலாய் விளங்கும் அருட்பெருஞ்ஜோதியை இராப்பகல் இன்றி சூழ்ந்து உறையும் சுகம் உண்டாகும்.

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly February 2018, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# ஆன்மீக சத்சங்கப் பெருவிழா

சொல்லுகின்ற உள்ளுயிரைச் சோர்வுற்றிடக் குளிர்ந்து
கொல்லுகின்ற நஞ்சில் கொடிதன்றோ - ஒல்லுமன்றத்து
எம்மானின் தாள்கமலம் எண்ணாது பாழ்வயிற்றில்
சும்மா அடைக்கின்ற சோறு. - திருஅருட்பா



**நாள்:** 25-02-2018, ஞாயிற்றுக் கிழமை

**இடம்:** அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம், பொள்ளாச்சி.

- அகவல் பாராயணம் - சன்மார்க்க அன்பர்கள்
- சிறப்பு சத்சங்கம் - சன்மார்க்க சாதுக்கள்
- ஜோதி தியானம்
- திருவருட்பா இசைக் கச்சேரி
- ஜோதி வழிபாடு

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

அனைவரும் அருள் பெற வருக!

தொடர்புக்கு: 75020 26565, 94434 89849

திரு/திருமதி

Periodical Issue

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை - 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865